விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 267 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 26 புதன்கிழமை (11.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## முடிவுகள் எட்டப்படாத நிலையில் தமிழரசுக் கட்சியின் கூட்டம் நிறைவு

(வவுனியா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விசேட கூட்டம் நேற்று வவுனியாவில் இடம்பெற்ற போதும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற, உத்தியோகபூர்மான தீர்மானம் எட்டப்படாத நிலையில் கூட்டம் நிறைவடைந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மூன்று விதமான நிலைப்பாட்டினை வெளியிட்டுள்ள நிலையில் கட்சியாக ஒருமித்துத் தீர்மானம் எடுப்பதில் குழப்ப நிலை காணப்படுவதை அவதானிக்க முடிந்துள்ளது.

சுமந்திரன் தலைமையிலான அணியினர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்துள்ள போதும் கட்சியின் தலைவர் 15

## டிப்பர் மோதியதில் மாணவி உயிரிழப்பு

### திருநெல்வேலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

டிப்பர் வாகனம் மோதியதில் தனியார் கல்வி நிலையம் சென்ற பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## ரயில் மோதியதில் பெண் உயிரிழப்பு

### ஓமந்தையில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, ஓமந்தையில் புகையிரதம் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுமார் 35 - 45 வயது மதிக்கத்தக்க பெண் சம்பவ இடத்திலேயே மரண 15

## 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்கி

# இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்க

## ஐ.நாவில் இந்தியா வலியுறுத்து




- மாகாண சபைகளை இயங்கச் செய்வதன் ஊடாக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும்.
- சமத்துவம், நீதி, சமாதானம் ஆகியவற்றில் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## 5 இராஜாங்க அமைச்சர்கள்

### ஜனாதிபதியால் பதவி நீக்கம்

(கொழும்பு)

5 இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிரடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கியுள் 15

## சஜித்துடன் கலந்துரையாடுவோம்

### சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான காலவரையறைகள் தொடர்பில் அவருடன் நான் கலந்துரையாடி விசேட குழு 02

## உடுப்பிட்டியில் விபத்து

## ஜேர்மனியில் இருந்து வந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியிலிருந்து 16

## இன, மத, கருத்துச்சுதந்திரம் எமது ஆட்சியில் பேணப்படும்

### ஜனாதிபதி வேட்பாளர் அநுர



(மாத்தளை)

"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாட்டில் இன, மத, கருத்துச் சுதந்திரம் பேணப்படும்" என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தி 15

அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
ஹந்தஹண
Handahana ராசி சுப பலன்
அடுத்த மில்லியன் வெற்றியாளர் நீங்களா?
ரூ.மூன்று மில்லியன் சுப்பர் பரிசு வெற்றியாளர்


ஹந்தஹண 762 ஆவது சீட்டிழுப்பிலே ரூ.5,134,586.00ஐ வென்ற சுப்பர் பரிசு வெற்றியாளர்
தேசிய லொத்தர்
(C-2421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அ.மரியதாஸ் ஜெபரத்தினம்

(ஓய்வுநிலை உப அதிபர் - திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி)



திரு இருதயக்கல்லூரி அருகாமை, கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட அ.ம.ஜெபரத்தினம் அவர்கள் 10.09.2024 அன்று காலமானார்.

அன்னார் திருமதி ஜோசப்பின் ஜெபரத்தினம்(ஓய்வுநிலை ஆசிரியர் - திருக்குடும்பக் கன்னியர் சபை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - அன்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான V.M. ஜோசப் - சொர்ணம்மா தம்பதியினரின் மருமகனும் திரு.குணரத்தினம்(கனடா), காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம், சுகிர்தமலர் மற்றும் செல்வி ஜஸ்மின்(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் - வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபைகள்) ஆகியோரின் சகோதரனும் திரு.ஜோய் மாதவன்(விரிவுரையாளர் - தொழிநுட்பபீடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), திரு.ஜோண்சன் திவ்வியானந்த்(ஆசிரியர் - கனகராயன்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ஜெனிற்றா(கனடா), காலஞ்சென்ற ஜெனற் அபிஷாலினி ஆகியோரின் சிறிய தந்தையும் திரு.அன்ரன்(கனடா), திரு.ஜெயம்(கனடா), திரு.ஆனந்தா(யோசப் மாஸ்டர்), Rev.Sr.Francis(திருக்குடும்ப கன்னியர் சபை), திரு.குமார்(கனடா), மேரி நவமணி(கனடா), காலஞ்சென்ற ஜெயராஜன் ஆகியோரின் மைத்துனரும் திருமதி.ஜீனா கிறிஸ்ரீனாவின் மாமனாரும் ஷைனி கிறேஷியாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.09.2024 புதன்கிழமை 25,மாட்டீன் ஒழுங்கையிலுள்ள அவரது வீட்டிலும் 12.09.2024 வியாழக்கிழமை திரு இருதயக்கல்லூரி அருகாமையிலுள்ள அவரது வீட்டிலும் வைக்கப்பட்டு அன்று பி.ப 3 மணியளவில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரவெட்டி கத்தோலிக்க சேமக்காலை கீரிப்பல்லியில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 967 2805 (C-1157) தகவல்: குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 10 - 1948



மறைவு 09 - 09 - 2024

## நாகலிங்கம் செல்வராணி

யாழ்ப்பாணம் கரணவாய் தூதாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வராணி அவர்கள் 09.09.2024 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சுந்தரம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரை - பாறுவதி தம்பதிகளின் மருமகளும் நாகலிங்கம்(லிங்கம்ஸ் மணப்பந்தல்) அவர்களின் ஆருயிர் மனைவியும் மதிமாறன்(நோர்வே), நளாயினி(கனடா), மதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறேமலீலா(நோர்வே), மகாலிங்கம்(கனடா), சுபாஜினி(கனடா) ஆகியோரின் மாமியாரும் சாருசன், பதுசன், ஹரினி(நோர்வே), சுகந்தன், நிந்துசன், அனோசன், ஆதீஸ், தனோஜ், ஜாதவ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிதம்பரப்பிள்ளை(அமரர்), சிவராஜா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்தணம், சிவபாதசுந்தரம்(அவுஸ்திரேலியா), அழகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.09.2024) நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நாகலிங்கம் (கணவர்)
077 600 8213
(C-1160)

## சஜித்துடன்...

விற்கு அறிவிப்பேன். எனவே மத்திய செயற்குழு கூட்டமும் இரத்து செய்யப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட குழு கூட்டம் தொடர்பில் அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் நேற்றைய கூட்டம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்.

14 ஆம் திகதி நடைபெற இருந்த மத்திய செயற்குழு கூட்டம் இரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததன் காரணமாக மீண்டும் மத்திய செயற்குழுவை கூட்ட வேண்டிய தேவை இல்லை என்பதினால் அது இரத்து செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் பின்னர் கூடலாம். தற்போது அதற்கான தேவை இல்லை என்பதன் அடிப்படையிலேயே இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என தெரிவித்ததன் அடிப்படையில் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை விடயம். புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான விடயம் உட்பட பல்வேறு விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கான கால வரையறை தொடர்பாக சஜித்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது என முடிவு எட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குறித்த கால வரையறைகள் தொடர்பாக சஜித் பிரேமதாஸவுடன் நான் கலந்துரையாடியதன் பின்னர் அதில் எட்டப்பட்ட தீர்மானங்களை இந்த விசேட குழுவிற்கு அறிவிப்பது எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது என்றார்.(ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

(1901)

198, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்

1. வரவேற்பாளர்
2. சிட்டை போடுபவர்
3. விற்பனையாளர்
4. பைக்கிங் செய்பவர் உடன் தேவை.

(1906)

077 748 8093


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16.05.1948

மறைவு 09:09:2024

எமது பிரதேச செயலக J/398 அல்வாய் வடமத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி முருகேசன் ஸ்ரீலட்சுமி** அவர்களுடைய அன்புத் தாயார்

## தில்லைநடராசா அல்லிராணி

அவர்கள் 09.09.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-1155)

# இதய அஞ்சலி

தோற்றம் 27 . 10 . 1968



மறைவு 09 . 09 . 2024

அமரர்

## அம்பலவாணர் சரஸ்வதி (சரஸ் அக்கா)

சரசு அக்கா,
நம் - உடன் பிறவா சகோதரி
உறவுக்கும் உரிமைக்கும்
உன்னிடத்தில் யாரினி?
காமாட்சி அழைத்தாளோ;
கண்மூடிக்கிடக்கின்றாய்?
அவளாட்சி நிழலாறு
அரவணைப்பாள் அப் பெருந்தாய்!!

[illegible]டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(1907)
வேல்மாறன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆரம்பப் பொது வழங்கல் (IPO) இன்னும் 2 நாட்களில் ஆரம்பம்!

**1,379,310,400** வரையான புதிய சாதாரண வாக்குரிமைப் பங்குகளை, ஒரு பங்கின் விலை ரூபா **14.50** வீதம் மொத்தமாக ரூபா **20,000,000,800/-** வரையான நிதியை திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது **www.ltl.lk/ipo** ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA Commitment. Trust. Continuity

LTL HOLDINGS LIMITED

(C-2420)

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO) - 2024 செப்டம்பர் 13 ஆரம்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மாபெரும் கரப்பந்தாட்ட தொடர் இளவாலையில் இன்று ஆரம்பம்


இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டத் தொடர் இம்முறை அமரர் சிவகுருநாதனின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்னும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இம் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் யாழ். மாவட்ட ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த 10 கழகங்களை உள்ளடக்கி சுழற்சி முறையில் இன்று முதல் ஆரம்பமாகிறது.

தொடர்ச்சியாக தினந்தோறும் இரவு மின்னொளியில் புதிதாக உருவாக்கப்பட்ட கரப்பந்தாட்ட திடலில் (இளவாலை மெய்கண்டான் பாடசாலை அருகே) இடம்பெறவுள்ள போட்டிகளின் இறுதிப்போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி இரவு இடம் பெறவுள்ளது.

1ஆம் நாள் ஆட்டத்தில் இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு ஆவ ரங்கால் மத்தி Vs புத்தூர் வளர்மதி, இரவு 8 மணிக்கு ஆவரங்கால் இந்து Vs தொண்ட மனாறு கலையரசி, இரவு 9 மணிக்கு அளவெட்டி மத்தி Vs அச்சுவேலி விக் னேஸ்வரா ஆகியவை மோதவுள்ளன. (நி)

## ஓய்வை அறிவித்தார் மொயீன் அலி



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை வீரரான 37 வயதுடைய மொயீன் அலி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இவர் 2019 ஒருநாள் உலகக்கிண்ணம் மற்றும் 2022 ரி-20 உலகக்கிண்ணம் வென்ற இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்தார். மிகச்சிறந்த சகலதுறை வீரர்களுள் ஒருவராக கருதப்பட்ட மொயீன் அலிக்கு எதிர்வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதி ரான தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மொயீன் அலி அறிவித்துள்ளார். இதனால் ரசிகர்கள் மிகுந்த வருத்தம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 240 | 150-160 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 190 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 | 250 |
| தக்காளி | 200 | 200 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 300 | 240 | 150-200 | 200 |
| கோவா | 250 | 320 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 300 | 300 | 300 | 300 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 140 | 80 | 80 | 200 |
| வாழைக்காய் | 250 | 200 | 240 | 200-220 | 240 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 150 | 320 |
| பெரிய வெங்காயம் | 230 | 200 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 50 | 80 | 100 | 80-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 100 | 200 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 70-100 | 150 |
| லீக்ஸ் | 300 | 300 | 320 | 300 | 320 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 70-90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 400 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 200 | 150-240 | 200 |
| போஞ்சி | 350 | 350 | 350 | 300 | 450 |
| கத்தரி தம்புள்ள | 150 | 200 | -- | -- | 250 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 100 | 120 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 300-350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 100-120 | 100-130 |
| இராசவள்ளி | -- | 950 | -- | 650 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 380 | 400 | -- | 350 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 80 | -- | 50 | 90 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3217


### திவ்யா




### தனுஷ்கா




### ராதிகா




### அரவிந்




### மதுஷன்




### லிந்துஜா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாபொல உதவித் தொகையை அதிகரிப்பதற்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் மஹாபொல மற்றும் உதவித் தொகையை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல மற்றும் உதவித்தொகைகள் அதிகரிக்கப்படாததால், மேற்படி மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை கல்வி அமைச்சர், வர்த்தக மற்றும் உணவு அமைச்சர் சமர்ப்பித்த கூட்டுத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த முன்மொழிவை கருத்தில் கொண்டு, 2025 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும் வகையில் மஹாபொல புலமைப்பரிசில் 7,500 ரூபாயாகவும், உதவித்தொகை 6,500 ரூபாயாகவும் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (நி)

# இன்னும் இரு வாரங்களில் சா/த பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாதத்திற்குள் வெளியிட எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இறுதி கட்டத்தில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

சாதாரண தரப் பரீட்சை பெறு பேறுகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. அந்தப் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத்திற்குள் வழங்கத் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 - 07 - 1951



மறைவு
07 - 09 - 2024

## அமரர். தாவீது பேரின்பநாதன்

**(ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தாவீது பேரின்பநாதன் (ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்) அவர்கள் 07.09.2024 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவீது-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோசப் அன்ரனி-அனஸ்ரெசியா தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற குணரெட்ணம், திருச்செல்வம் மற்றும் இராஜேஸ்வரி, செல்வராஜா, தங்கராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானமலர், விக்ரோறியா, யோசப், மேரி பத்தராணி, ராசா, கடம்பேஸ்வரி, டொறின்(நோர்வே), இந்திரா(பிரான்ஸ்), அலக்ஸ்சாண்டர் (இந்தியா), அன்ரன்(நோர்வே), யோகராசா (லண்டன்), மேலின் (பிரான்ஸ்), ஜீவா (லண்டன்), நொயிலின் (நீர்கொழும்பு), காலஞ்சென்ற சில்வெஸ்ரர், தர்மலோஜினி (ஜேர்மனி),றெட்ணமலர் (பிரான்ஸ்), வபா (பிரான்ஸ்), யோச்சி (இத்தாலி), குமார் (ஜேர்மனி), குட்டி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யசோபா (பிரான்ஸ்), சுதா, கிருபா, சுபாஸ், நிலோபா (லண்டன்), சினோபா, ஜெனிபா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணா (பிரான்ஸ்), ரூபி, ரஞ்சினி, அஜன், சுதாகர் (லண்டன்), றெஜி(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், அஸ்வினி, அன்றியன், அபிநாத், கெறிஸ், டெறிக், செறினா, அனுஸ்கா, மோனிஷா, ஆகாஷ், வைஸ்னவி, சைந்தவி, சஜன், வியான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.09.2024 இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

தகவல் :
குடும்பத்தினர்
076 308 5952

# கண்ணீர் அஞ்சலி

வலம்புரி பத்திரிகையில்
நீண்டகாலமாக
அர்ப்பணிப்புடன் பணியாற்றிய

திரு.
## தாவீது பேரின்பநாதன்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை
உத்தியோகத்தர்)

அவர்களின் மரணச் செய்தி
அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால்
துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.07.1951 | 07.09.2024 |

(இ)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
**வலம்புரிக் குடும்பம்.**

# இராசிபலன்

11.09.2024
ஆவணி 26, புதன்கிழமை
அட்டமி முன்னிரவு 7.12 மணிவரை

கேட்டை பிற்பகல் 6.01 மணிவரை
சுபநேரம் 4.33- 6.03 மணி வரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
அச்சுவினி, பரணி

**வளவன்**


மேஷம்

எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.


மிதுனம்

சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், வியாபார விருத்தியுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.


கடகம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


சிம்மம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கும் வித்திடுவீர்கள், தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர்.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாட்டில் ஆர்வம் கூடும்.


துலாம்

பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன நன்மையுண்டு.


விருச்சிகம்

உறவினர் பகை அகலும், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


மகரம்

வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவார்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.


கும்பம்

திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், சமார்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.


மீனம்

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்.

**ஒருவன் தனக்குத் தானே பேசிக் கொண்டிருப்பதற்கு பெயர் சிந்தனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் நேற்று முன்தினம் திருமஞ்சத் திருவிழா வெகு சிறப்பாக இடம்பெற்றது. துர்க்கை அம்மன் மஞ்சத்தில் ஆரோகணித்து அருள் பாலித்தார். (படங்கள்: சிவசாந்தன்)

## மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்றில் மணல் ஏல விற்பனை எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும். பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

கொள்வனவு செய்யப்பட்ட மணலின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாக செலுத்தி மணலினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை அன்றைய தினமே மாலை 4.30 மணிக்கு முன்பு நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார் (நி)

# சுன்னாகத்தில் விபத்து! இளைஞனின் பாதம் துண்டானது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மோதுண்ட விபத்தில் ஒருவரது பாதம் துண்டான சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை வீதியின் சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரது கால்ப்பாதம் மற்றொரு மோட்டார் சைக்கிளுக்குள் சிக்கி துண்டானது. காயமடைந்தவர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-33)

# தேர்தல் தொடர்பான முன்னாயத்த செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வானது யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்ட செயலக மாநாட்டு மண் டபத்தில் நேற்று நடைபெற்றது.

இச் செயலமர்வில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (நி)

## விஞ்ஞான பீடத்திற்கு புதிதாக தெரிவான மாணவர்களை தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புதல் பட்டியல் மூலம் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர் களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ள தனால் அவர்களைப் பீடாதிபதி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் அறிவித்துள்ளார். (நி)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான விநாயகர் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணிவரையுள்ள சுபவேளையில் இடம் பெறும் என ஆலய தேர் திருப்பணிச்சபையினர் தெரிவித்துள்ளனர். (நி)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 - 03 - 1948 |  | 10 - 09 - 2024 |

## அமரர். கந்தையா தர்மகுலசிங்கம்

நவாலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். கந்தையா தர்மகுலசிங்கம் அவர்கள் 10.09.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்-இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும், அனந்த சயனன், பிரதீபா, அமரர் சுஜீபா மற்றும் முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் பரமேஸ்வரி, கணேசு, வரதராசா, வில்வராசா, புவனேஸ்வரி, சிவானந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேக்கா, கிருபானந்தன் விஜிதா ஆகியோரின் அன்புமாமனாரும், நேக்கா, நியா அர்ஜன், ஹரின், நிரன், அருண், வருண், அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.09.2024 நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் முருகமூர்த்தி கோவில் வீதி நவாலி கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நவாலி கிழக்கு, நவாலி. (C-1145) குடும்பத்தினர் தொ.பே.இ- 077 614 5244

# உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விவசாயப் பீடத்தின் பத் தாவது உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்று புதன் கிழமை காலை 8 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விசாயப் பீட கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆராய்ச்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவும் பிரதான பேச்சாளராக கரிபியன் வேளாண்மை உற் பத்தி மேம்பாட்டு செயற்றிற னின் திட்ட இயக்குநர் சாண்டி ஃபோர்ட் ஆர்.எட்வர்ஸ் முதன்மை உரையினை ஆற்றவுள்ளார்.

தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழக பேராசிரியர் ஈ.சோமசுந்தரம் சிறப்புரையினை நிகழ்த்தவுள்ளார்.

மேலும் நாளை வியாழக் கிழமை சர்வதேச மற்றும் இலங்கையைச் சேர்ந்த புலமையாளர்களால் இரு செய லமர்வுகள் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# யோகக்கலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதி வுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## ஐ.நாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனீவா)

**அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும், மாகாணசபைத்தேர்தல்களை விரைவாக நடத்தி மாகாண சபைகளை இயங்கச்செய்வதன் ஊடாகவும் நல்லிணக் கத்தைக் கட்டியெழுப்பமுடியும் என ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேரவையின் தலைவர் ஓமர் நிபர் தலைமையில் ஆரம்ப மானது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து இந்தியா சார்பில் உரை யாற்றிய பிரதிநிதி, இலங்கை யுடனான உறவைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களுக்கான சமத்துவம், நீதி, சமாதானம் ஆகியவற் றுக்கும் மறுபுறம் இலங்கை யின் இறையாண்மை, சுயா தீனத்துவம் ஆகியவற்றுக் கும் முன்னுரிமை அளித்து வருவதாகக் குறிப்பிட்ட இந் தியப் பிரதிநிதி, அரசிய லமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும், மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடத்தி மாகாணசபை களை இயங்கச்செய்வதன் ஊடாகவும் நல்லிணக் கத்தைக் கட்டியெழுப்ப முடி யும் என நம்பிக்கை வெளி யிட்டார்.

மேலும் அதற்குரிய நடவ டிக்கைகளை இலங்கை அர சாங்கம் முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத் திய அவர், எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கையில் நடை பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலும் அதற்குப் பங்க ளிப்புச் செய்யும் என நம் பிக்கை வெளியிட்டார். (நி)

## சந்திரகுமாரின் கட்சியின் பதிவு தேர்தல் ஆணைக்குழுவால் இரத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமை யிலான அரசியல் கட்சியின் பதிவு தேர்தல்கள் ஆணைக் குழுவால் இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

சந்திரகுமார் தலைமையி லான சமத்துவக் கட்சி 3 வருடங்களுக்கு முன்பு ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலம் முதல் இன்று வரை அந்தக் கட்சியின் கணக்கு அறிக் கையைத் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கவில்லை.

கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக் குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு 3 தடவைகள் கடிதம் அனுப்பியும் பதில் அளிக் காத காரணத்தினாலேயே தற் போது தேர்தல்கள் ஆணைக் குழு சமத்துவக் கட்சியின் பதிவை நீக்கியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் அறிவிப் பின் பின்னர் 2024.08.26 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளி யிட்ட 2399/14 இலக்க அரச இதழில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டி யலில் சமத்துவக் கட்சியின் பெயர் நீக்கப்பட்டு 77 அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியலே வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்திரகுமா ரின் கட்சி இம்முறை ஜனா திபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி)

## 3,000ஐ கடந்த தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலு டன் தொடர்புடைய முறைப் பாடுகளின் எண்ணிக்கை 3,041 ஆக அதிகரித் துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.


கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியி லேயே இந்த முறைப்பா டுகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம் நேற்று முன் தினம் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 172 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் கள் ஆணைக்குழு குறிப்பிட் டுள்ளது. (நி)



# வெல்க தமிழ்

சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.



(அ-014)

தமிழ்ப் பொது வேட்பாளர்

பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு



# கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா:24 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, London (கடை)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14706 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா-56<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14709 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:52<br>2 இல் செவ்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Degree, Teacher<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14707 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Bsc, Teaching (temporary)<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/14712 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்:6'3"<br>தகைமை/தொழில்:College (Canada), Supervisor (Canada)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14710 | பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா:-14<br>10 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:குணமான மணமகன்<br>தொ.இ: G/14716 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பூமியை மாசுபடுத்தும் நாடுகளில் இந்தியாவிற்கு முதலிடம்-ஆய்வில் தகவல்

(டில்லி)

பிளாஸ்ரிக் கழிவுகளால் பூமியை மாசுபடுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதல் இடத்தை பிடித்துள்ளது. அதற்கமைய, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 93 லட்சம் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்படுகிறது என்று நேச்சர் ஜர்னலில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.



உலக அளவில் 5 இல் ஒரு பங்கு பிளாஸ்ரிக் கழிவுகள் இந்தியாவில் தான் உருவாகிறது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு நாளும் 120 கிராம் பிளாஸ்ரிக் கழிவுகள் உற்பத்தி செய்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு அடுத்த படியாக நைஜீரியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் அதிக அளவிலான பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்படுகிறது.

அந்த நாடுகளில் முறையே 35 லட்சம் மற்றும் 34 லட்சம் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்படுகிறது.

உலகில் அதிக அளவிலான பிளாஸ்ரிக் கழிவுகளை உருவாக்கும் நாடுகளின் பட்டியலில் சீனா 4 ஆம் இடம் பிடித்துள்ளது. இதற்கு முன்பு சீனா தான் அதிக அளவிலான பிளாஸ்ரிக் கழிவுகளை உருவாக்கும் நாடாக இருந்தது.

ஆனால் இப்போது அந்நாட்டில் சிறப்பாக மேற்கொள்ளப்படும் கழிவு மேலாண்மையால் பிளாஸ்ரிக் கழிவுகளை சீனா குறைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## இந்தியாவில் குரங்கம்மை தொற்று அறிகுறியுடன் ஒருவர் அடையாளம்



(டில்லி)

இந்தியாவில் ஒருவருக்கு குரங்கம்மை அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் இலங்கையில் இது குறித்து விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.

ஆபிரிக்க நாடுகளில் குரங்கம்மை நோய் பரவி வருகிறது. ஏராளமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனால் சுகாதார அவசரநிலையை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் வெளிநாட்டில் இருந்து வந்த நபரொருவருக்கு குரங்கம்மை அறிகுறி இருந்ததால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நாட்டில் குரங்கம்மை குறித்து கண்காணிப்புக்கான நடவடிக்கைகளை அமைச்சகம் அதிகரித்துள்ளது. (நி)

## யாகி சூறாவளி; உயிரிழப்பு அதிகரிப்பு




(ஹனோய்)

யாகி சூறாவளி காரணமாக வியட்நாமில் 60 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த ஆண்டு ஆசிய கண்டத்தைத் தாக்கும் மிக மோசமான சூறாவளி இது வாகும் என்றும் இதன் விளைவாக வடக்கு வியட்நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் 12 மாநிலங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் கரையோரப் பகுதியில் இருந்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (நி)

## பிரதமர் மோடியை சந்தித்த அபுதாபி பட்டத்து இளவரசர்



(டில்லி)

. அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் காலித் பின் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் 2 நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளார்.

அவருடன் அமீரகத்தின் பல்வேறு துறை அமைச்சர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவும் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளது.

பட்டத்து இளவரசராக முதல் முறையாக இந்தியா வந்த அவருக்கு டில்லியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் அவரை மத்திய வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல் வரவேற்றார். பின்னர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் அபுதாபி பட்டத்து இளவரசர் டில்லியில் பிரதமர் மோடியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்பின் போது பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## ஆப் ஊட் 35 லட்

(காபூல்)

ஆப்கானிஸ்தா ஊட்டச்சத்துக் கு சிசுக்கள் அபா தெரிவிக்கப்பட்டுள்

இந்நிலைக்குக் கடந்த 40 ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தம் மற்றும் அரசநிர்வாகத்தைக் கையேற்ற தலிபான்களின் செயற்பாடுகளே முக்கிய காரணிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வரலாறு காணாத வறுமை ஆப்கானிஸ்தானிய மக்களைத் தாக்கி வருவதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல

## காசா அகதி இஸ்ரேல் கு

❖ 40 பேர்


❖ 60 பேர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ப்கானை சீரழிக்கும்
# ட்டச்சத்து குறைபாடு
## ட்சம் சிசுக்கள் அபாய கட்டத்தில்!

**தானைச் சீரழிக்கும் கடுமையான குறைபாடு காரணமாக 32 இலட்சம் பாய கட்டத்தில் உள்ளதாகத் டுள்ளது.**



சிசுக்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாகப் பலியாகி வருவதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் கவலை வெளியிட்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தானில் உள்ள சிறிய மருத்துத்துவமனை ஒன்றில் மட்டும் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 700 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் என்பன பல சிரமங்களுக்கு மத்தி யில் மட்டுப்படுத்தப் பட்ட உதவி களை வழங்காதிருந்தால் மரணமாகும். குழந்தைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித் திருக்கும்.

தலிபான்கள் பலாத்காரமாக அரச நிர்வாகத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை முந்தைய அரசாங்கத்திற்கு நேரடியாக வழங்கப்பட்ட சர்வதேச நிதிகள் ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்துத் பொதுச் சுகாதாரத்திற்கும் வழங்கப் பட்டன.

தலிபான்களின் கட்டுப் பாட்டின் கீழ் ஆப்கானிஸ் தான் வந்ததன் பின், நிதி வழங்கச் சர்வதேசம் கடுமையான தடைகளை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதன்காரணமாகவே தற்போது ஊட்டச்சத்து காரணமாகப் பல சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# திமுகாம் மீது
# குண்டுவீச்சு
## உயிரிழப்பு
## காயம்



(காசா)

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இந்த நிலையில் தெற்கு காசாவில் உள்ள கான் யூனுஸ் நகர் அருகே அல்மவாசி பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கியிருந்த முகாம் மீது இஸ்ரேல் ராணுவம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இதில் 40 பேர் பலியானார்கள். 60 பேர் காயம் அடைந்தனர்.


தாக்குதல் நடந்த இடத்தில் ஆழமான பள்ளங்கள் ஏற்பட்டு அதில் இடிபாடுகள், மணலால் மூடப்பட்டன. மீட்புப் பணியாளர்கள் மண்வெட்டிகளைப் பயன்படுத்தி மணலை அகற்றினர் .

சிலர் செல்போன் ஒளியில் மணலை தோண்டுவதற்கு தங்கள்கைகளைப் பயன்படுத்தி மணலில் புதைந்தவர்களை மீட்டனர்.

மனிதாபிமான பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் மனிதாபிமான பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி இருந்ததாகவும் அவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (நி)

# மணிப்பூர் போராட்டம்
## 5 மாவட்டங்களில் ஊரடங்கு



(டில்லி)

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டக் கோரி மாணவர்கள் முன்னெடுத்த போராட்டத்தையடுத்து 5 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரு சமூகங்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல் கலவரமாக வெடித்ததில் ஐவர் உயிரிழந்தனர். இதனையடுத்து அங்கு பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டக் கோரி மாணவர்கள் முன்னெடுத்த தொடர் போராட்டத்தையடுத்து, கிழக்கு மற்றும் மேற்கு இம்பால் மாவட்டங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர அரசு தடை விதித்துள்ளது.

அத்துடன் தவ்பால் மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டவிதி 163 (2) இன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்கு மட்டும் ஊரடங்கில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 16,000 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு


## பாராளுமன்ற விசேட குழு அறிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் சுமார் 16,000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

இதேவேளை நாட்டிலும் வாழும் குடும்பங்களில் 1/4 பகுதியினர் அயலவர்களின் உணவின் மூலம் வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விடயங்கள் குழந்தைகளின் போசாக்கின்மை நிலைமையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட, பாராளுமன்ற விசேட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. உயரம் குறைதல், பலவீனமாதல், நிறை குறைவாக இருத்தல், நுண் போசனைக் குறை பாடுகள் போன்ற நான்கு விடயங்களின் ஊடாகச் சிறு வர் போசாக்குக் குறை பாட்டு நிலைமைகள் ஏற் படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், முன் பள்ளி உணவு மற்றும் பாடசாலை உணவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தரமான உணவு வழங்கலிற்கான பாடசாலைச் சிற்றுண்டிச் சாலை வழி காட்டல்கள்



ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தலை கண்காணித் தல் உள்ளிட்ட பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. (நி)

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கைக்கு 200 மில்லியன் டொலர்

(கொழும்பு)

ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடனைப் பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நிதித் துறையில் ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்தத் திட்டத்தைச் செயற்படுத் துவதற்காக 2 துணைத் திட்டங்களின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடனைப் பெற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 23 கடற்கரை வீதி, ஆதன இலக்கங்கள் 385, 385 1/1, 385 1/2, 385 1/3, 387, 389 ஆகிய வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் தாவீது மனுவேல் கைம்பெண் எலிசபெத் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குருநகர் புதுமை மாதா கோவில் மேற்கு வீதி இல. 45 ஐச் சேர்ந்த 1) ஜோர்ஜ் கென்றி இராசநாயகம் 2) ஜோர்ஜ் கென்றி பீலிக்ஸ் செல்வநாயகம் 3) ஜோர்ஜ் கென்றி யோசப் ஆகியவர்கள் 14.09.1988 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இயூஜின் மரியாம்பிள்ளை முகதாவில் 1047ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த தமது சகோதரிகளாகிய 1) ஜோர்ஜ் கென்றி மகள் திரேசம்மா 2) ஜோர்ஜ் கென்றி மகள் பிலோமினா 3) ஜோர்ஜ் கென்றி மகள் மேரி றோஸ் ஆகியோருக்கு நன்கொடையளித்துள்ளனர்.

மேற்குறித்த உறுதியில் நன்கொடை கொடுப்பவரினதும் நன்கொடை ஏற்பவரினதும் பேத்தியாகிய கிறகரி யோசேப் பெண் திரேசியாப்பிள்ளை ஆட்சியும் உரிமையுமாகவிருந்து அவர் மூலமாக தமக்கு வந்தடைந்த தகப்பன் வழி முதுசமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனங்களை குருநகர் புதுமை மாதா கோவில் மேற்கு வீதி இல. 45 ஐச் சேர்ந்த ஜோர்ஜ் கென்றி மகள் திரேசம்மா, ஜோர்ஜ் கென்றி மகள் மேரி றோஸ் ஆகியோர் 18.05.2003 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராமநாதன் ஜெயசிங்கம் முகதாவில் 3418 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் செபஸ்ரியன் பெனடிக்ற் ஜெராட் ஸ்ரனிஸ்லஸ் இற்கும் பெண் செல்வநாயகிக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று குருநகர் இறை: 'குடியிருப்பு வளவும் மேய்ப்பன் வளவும்' நிலப்பரப்பு 1 ஒன்று குளி (6) ஆறும். இதன் எல்லைகள்

கிழக்கு: ஆசீர் யேசுராசாவின் ஆதனம்
வடக்கு: மரியான் பிறஞ்சியின் உரிமைக்காரரின் ஆதனம்
மேற்கு: றோட்டு
தெற்கு: சம்பேதுருவானவர் மடம் இதடங்கலும்

தற்போது செபஸ்ரியன் பெனடிக்ற் ஜெராட் ஸ்ரனிஸ்லஸ்வும் பெண் செல்வநாயகியும் இவ்வாதனங்களைத் தமது பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனங்களிற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனங்களானது ஜெராட் ஸ்ரனிஸ் லஸ்வும் பெண் செல்வநாயகியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், யாழ்.மாநகர சபை, யாழ்ப்பாணம்**



# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

**என் இனிய நெஞ்சங்களே!**

(24.08.2024) வலம்புரி பத்திரிகையிலே அவசர செய்தியாக தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈசுர விநாயகரை மன ஊஞ்சலில் இருத்தி ஆட்டுங்கள் எல்லோரிடமும் ஓடி வருவார். நாட்டிற்கு மட்டுமல்ல வீட்டிற்கும் என்று ஐயா கூறியிருந்தேன். பார்த்தீர்களா! ஓடி வந்து தமிழ் மக்களின் ஆட்சித்திறப்பையே தந்தருளிவிட்டார். அவரின் கருணையை. தெய்வீகத்தை திருவிளையாடல்களை எப்படிக் கூறுவேன். தமிழ் மக்கள் சார்பாக அவரை தஞ்சம் என்று அடைந்தேன். அதனால் அடியேனிடம் திறப்பைத் தந்தருளினார். இதனை அதிவிஷேட செய்தியாக அனைத்து மக்களுக்கும் வலம்புரி பத்திரிகையிலே (06.09.2024) அறியத்தந்திருந்தேன். கடவுளை மட்டுமல்ல மனிதரையே ஊஞ்சலில் இருத்தி ஆட்டிப்பாருங்கள் எங்களுக்கு என்ன காரியங்கள் செய்து தர முடியுமோ அதனை செய்து தந்து விட்டுத் தான் போவார்கள். அதாவது காரியம் செய்பவரை சந்தோஷப்படுத்துவதன் மூலம் எங்கள் அன்பை வெளிப்படுத்துவது ஆகும். அதுபோல் இறைவனும் அன்புக்கு அடிமையாவார். யான் பெற்ற இன்பம் பெறுக எம் தமிழினம்.

முடிவு சம்பவத்தின் தர்சனத்தை எப்படிக் காட்டினார் என்பதை உங்கள் எல்லோருக்கும் அறியத் தருகின்றேன். ஈசுர விநாயகரின் ஆலயத்தின் தூபி இருப்பிடத்தை விட்டு மெல்லமெல்ல தெற்குப் பக்கமாக நகர்கின்றது. அப்போது அடியேன் எல்லோரும் ஓடி வாருங்கள் தூபி வானத்திலே தெற்கு பக்கமாகப் போகின்றது என்று காட்டுகிறேன். சிலர் எங்கே எங்கே என்று கேட்கின்றார்கள். இவர்களுக்கு எப்படி காட்டுவது. என்று நினைக்கும் போது என்ன அதிசயம்! தூபியைச் சுற்றி ஒளி தெரிகிறது. இப்போது தெரியாதவர்கள் எல்லோரும் தெரிகிறது தெரிகிறது "அரோகரா" "அரோகரா" என்று வணங்குகிறார்கள். கோசமிடுகிறார்கள். எல்லோருக்கும் காட்டிய சந்தோசத்தில் அடியேன் இருக்கும் வேளையில் என்ன ஆச்சரியம்! விநாயகர் முகம் பொருந்திய விமானம் ஒன்று எங்களை வட்டமிடுகின்றது. திடீரென யாரும் எதிர்பாராத விமானங்கள் வடக்கே இருந்து தொடர் தொடராக வந்து கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. புற்றினுள் இருந்து ஈ வருவது போல பேரிரைச்சல் சத்தத்துடன் வந்து கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் பயப்பட வேண்டாம் தமிழ் மக்களைக் பாதுகாக்க நான் இருக்கிறேன் என்று விநாயகர் முகம் பொருந்திய விமானம் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. விமா னங்கள் வருகை முடிந்து விட்டதா? என்று வடக்கே பார்த்த போது விமானங்களை அனுப்பிய குழுவினரின் படம் தெரிகிறது. அவ்வேளை அசரீரி கூறிக்கேட்கின்றது. இவர்கள் தான் இலங்கைத் தமிழ்மக்களுக்காக பாடுபட்ட இந்தியத் தமிழர்கள். இவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல அறிவாளிக் குழுவினர். இலங்கைத் தமிழர்கள் இவர்களை என்றென்றும் மறக்கக்கூடாது சந்ததி சந்ததியாக போற்ற வேண்டும். நன்றிக்கடன் செலுத்த வேண்டும். என்று அசரீரி கூறியருளுகின்றது. இவ்வளவு காட்சியும் ஓர் திசைப் படம் பார்த்த மாதிரி பார்த்து முடிந்தது. இத் தர்சனத்தை எல்லோருக்கும் அறியத்தர வேண்டும் என்பது எனது விருப்பம். இனிமேல் நடக்கப்போகும் சம்பவங்கள் யாவும் எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே என்பதை நடைமுறையில் உணர்வோமாக

**என் அன்பு உள்ளங்களே!**

நாம் பிறக்கும் போதே தெய்வத்தின் ஆசீர்வாதத்துடன் தான் பிறக்கின்றோம். முற்பிறப்பில் நாங்கள் செய்த பாவ புண்ணியத்தின் பலனை இங்கே அனுபவிக்கின்றோம். அதாவது பாவத்தின் பலனாக துன்பத்தையும் புண்ணியத்தின் பலனாக இன்பத்தையும் அனுபவிக்கின்றோம். பாவத்தின் பலனை இறை வழிபாடுகள் மூலம் குறைக்க முடியும். புண்ணியத்தின் பலனை குருவின் ஆசீர்வாதம் மூலம் கூட்ட முடியும். எப்படி? நாங்கள் சிறப்புற வாழ வேண்டும் என்றால் இரண்டும் முக்கியம். அடியேனுக்கு குருமார்களின் ஆசிர்வாதம் நிறையை உண்டு. அவற்றுள் முக்கியமான குருமாரின் ஆசீர்வாதத்தைக் குறிப்பிடுகின்றேன். எனது முழு முதற்குரு இணுவையூர் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஐயா அவர்கள். அவரிடமே சமஸ்கிருத ஆகமக் கிரியைகளைக் கற்றேன். சுழிபுரத்திலிருந்து இணுவில் வரை சைக்கிளில் சென்று படித்தேன். அவர்கள் குடும்பமே என்னுடன் நல்ல பிடிப்பு. சாப்பிட்டு விட்டு போகலாம் இரும் பிறைசூடி என்று சொல்லி அம்மா சாப்பாடும் தந்து அனுப்புவார்கள். சைக்கிள் ஓடி ஓடி சமஸ்கிருதம் படித்த மகான் பிறைசூடி என்று பெருமையாக மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார். மகன் வத்சன் ஐயா அவர்கள் [illegible] குருவின் குடும்பத்தின் ஆசீர்வாதம் அடியேனுக்கு நிறைய உண்டு நானும் அவரிடம் இடையிடையே சென்று ஆசீர்வாதம் பெறுவேன். சுகம் விசாரிப்பேன். அடுத்தது எங்கள் ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் ஐயா. எங்கள் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திலே தமிழ் மக்களின் கொடிய கர்மாக்களைப் போக்க விஷேட யாக பூஜை வழிபாடுகள் செய்து ஈசுர விநாயகனின் கும்பாபிஷேகத்தையே சிறப்பித்து வைத்தவர். இவர் மட்டுமல்ல அப்பா. அம்மா இவரின் குடும்பமே அடியேனுடன் பிடிப்பு. ஆதலால் இவர்களின் குடும்ப ஆசீர்வாதமும் நிறையவே உண்டு. ஈசுர விநாயகரே அவரை அழைத்து வந்து விட்டார். இவர்களது ஆசீர்வாதமும் எனது ஆன்மிகப் போராட்டத்தை பலப்படுத்தியது என்று கூறுவேன். தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்றவாறு அடியேனுக்கு இரண்டுமே ஈசுர விநாயகனின் அருளால் அமைந்துள்ளது. அதனால் எடுத்த காரியம் யாவும் வெற்றியாக அமைகின்றது.

நவக்கிரக விநாயகனின் வழிபாட்டிற்கும் நவக்கிரகங்களின் வழிபாட்டிற்குமுள்ள வேறுபாடு......

இலங்கையிலே எங்கள் ஆலயத்தில் மட்டும்தான் நவக்கிரக விநாயகர் எழுந்தருளியுள்ளார். வேறு இடங்களில் இருப்பதாகத் தெரியவில்லை . அதனால் இவரைப்பற்றி விளக்கங்கள் தரவேண்டியது எனது கடமையாகும்.

அதாவது நவக்கிரக விநாயகர் நவக்கிரகங்களை எல்லாம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து கர்மாக்களைப் போக்குபவர். நவக்கிரகங்கள் சுதந்திரமாக இயங்கி தோசங்களை நீக்குபவர். கர்மா என்றால் எங்கள் சந்ததியினரின் தோசங்கள். கிரக தோசங்கள் என்றால் எங்கள் கிரகங்களின் தோசங்கள். சில காரியங்கள் செய்யும் போது எங்கள் கிரக தோசங்களை நிவர்த்தி செய்த பின்பும் தடைகள் வருகின்றன. அவை தான் எங்கள் சந்ததியினரின் கர்மா ஆகும். அதற்கு நவக்கிரக விநாயகரின் வழிபாடு முக்கியம் அவசியம். தமிழினத்தின் கொடிய கர்மாக்களைப் போக்க ஈசுர விநாயகரின் மற்றுமொரு வடிவம் தான் நவக்கிரக விநாயகர் என்பதை உணர்வோமாக. நவக்கிரக விநாயகரை வணங்குவோம். அவர் அருளை பெறுவோமாக.

"பார் தெரியுது பறாளாயான் பதி
பக்தர் குறைதீர்க்கும் சந்நிதி"

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)**

(1904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி அறிக்கை வெளியிடவுள்ளோம்

## மாவை சேனாதிராஜா அறிவிப்பு

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் விசேட குழுக் கூட்டம் நேற்று இடம் பெற்றது.

இதன் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏற்கனவே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஏற்கனவே 6 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலில் எமது மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும். என்ன அடிப்படையில வாக்களிக்க வேண்டும். அதற்காக கட்சி ரீதியான கொள்கை, எமது இனப் பிரச்சனை தீர்வு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பவற்றுக்கு ஆதரவான அறிக்கையை நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த தேர்தல் அறிக்கை காரணமாக



வேட்பாளர் சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாக கொள்கை அடிப்படையில் இணக்கம் ஏற்பட்டு அதில் எங்களுக்கும், அவருக்கும் இணக்கம் ஏற்படக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அல்லது 15 ஆம் திகதி கூடி ஆராய்ந்து பொது மக்களுக்காக அறிக்கையை வெளியிடவுள்ளோம் எனத் தெரிவித்தார். (நி-250)

# வாக்காளர் அட்டை விநியோகம்

## தபால் ஊழியருக்கு இடையூறு விளைவித்தவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சியில் வாக்காளர் அட்டை விநியோகிக்க சென்ற தபால் ஊழியருக்கு இடையூறு விளைவித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் பகுதியில் குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. வாக்காளர் அட்டை விநியோகிப்பதற்காக சென்ற தபால் ஊழியருக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஊழியரை மறித்து தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்ட குறித்த சந்தேக நபர் வாக்காளர் அட்டைகளை யும் பறிக்க முற்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி தபாலதிபருக்கு தகவல் வழங்கியதுடன் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-100)

# மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது

## நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை



(முல்லைத்தீவு)


புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் மரக்குற்றிகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் மரக்குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மரக்குற்றிகளை மீட்டதுடன், மரக்குற்றிகளை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருப்பதாகவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-299)

# தொடரும் மணல் அகழ்வுகளால் ஊரியானில் உவர் நீர் கசிவு

## முறையிடும் கிராம மக்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி கண்டாவளை ஊரியான் கிராமத்தில் கடந்த பல வருடங்களாக மணல் அகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பரந்தன் வழியாக பிற இடங்களுக்கு தொடர்ச்சியாக மணல் கொண்டு செல்லப்படுவதாக ஊரியான் கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஊரியான் கிராமத்தில் மணல் அகழ்வு நடைபெறும் பகுதியில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் ஆனையிறவு கடல் நீர் ஏரி காணப்படுகின்றது.

மணல் அகழ்வு இடம்பெறும் ஊரியான் கிராமத்தில் உவர் நீர் கசிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் தொடரும் மணல் அகழ்வினால் ஊரியான் கிராமம் உவர் நீரினால் அழிவு ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும் இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிராம அலுவலர், கண்டாவளை பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு கடந்த காலங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பல தடவைகள் ஊரியான் மணல் அகழ்வு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் தற்போது மணல் அகழ்வு இடம் பெறுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

# யானைவேலி அமைத்து தருமாறு புளியமுனை மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு செம்மலை புளியமுனை பகுதியில் யானைகளின் தொல்லை காரணமாக 1,000 ஏக்கர் வரையான பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் வருகை தரும் யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கும் விவசாயிகள் யானை வேலிகளை அமைத்துத் தந்து பயிர்களை பாதுகாக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெருமளவு பணம் செலவு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் யானைகளினால் தொடர்ந்து இழப்புக்களைச் சந்திப்பதன் காரணமாக எதிர்காலத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் இருந்து ஒதுங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (நி-350)

# புனரமைக்கப்படாத அணைக்கட்டுகளால் பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல குளங்களின் அணைக்கட்டுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக உறுதிமொழிகள் வழங்கப்படுகின்ற போதிலும் தற்போது வரை நிதி கிடைக்காததன் காரணமாக குளங்களின் வேலைகள் நடைபெறாமலே உள்ளன.

இதனால் மழைக் காலங்களில் குளங்களின் நீர் மட்டம் உயர்கின்ற போது அணைக்கட்டுக்கு அபாயம் ஏற்படுகின்றது.இதன் காரணமாக விவசாயிகள் மழை காலங்களில்



நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அணைக்கட்டுகளை பாதுகாப்பதற்காக விவசாயிகள் மண் மூடைகளை அடுக்கி வருகின்றனர்.

2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் முல்லைத்தீவின் தண்ணிமுறிப்பு குளம், அம்பலப் பெருமாள் குளம் போன்ற பல குளங்களின் அணைக்கட்டுகள் புனரமைக்கப்படாமலே உள்ளன. அணைக்கட்டுகளை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகக் காணப்படுகிறது. (நி-350)

# தெற்கு அதிவேக வீதியில் தீப்பற்றி எரிந்த வாகனம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவை இடமாறும் பகுதியில் வாகனம் ஒன்று நேற்றுக் காலை தீப்பிடித்து எரிந்துள்ளது.

மாத்தறை நோக்கி பயணிப்பதற்காக கொட்டாவ இடமாறும் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 577





ஆரம்பத்தில் இலேசாகத் தலைகாட்டிய ஆசைக்குப் பழுவூர் இளையராணி நந்தினி தூபம் போட்டுப் பெரிதாக்கி வந்தாள். சிறிய தீப்பொறி அதிவிரைவில் பெரிய காட்டுத்தீ ஆகிவிட்டது. பல்வேறு காரணங்களினால் சோழநாட்டுச் சிற்றரசர்கள் பலரும் பெருந்தர அதிகாரிகளும் மதுராந்தகனை ஆதரித்துச் சதிசெய்ய முற்பட்டதையும் பார்த்தோம்.

மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றுவதற்குச் சுந்தரசோழர் கண்மூடும் சந்தர்ப்பத்தை அவர்கள் எதிர்நோக்கியிருந்தார்கள். ஆனால் மதுராந்தகனோ அவ்வளவு காலம் காத்திருப்பதற்கே விரும்பவில்லை. சுந்தரசோழருக்குச் சிம்மாசனத்தில் பாதி இல்லையென்றும், தனக்கே சோழ சாம்ராஜ்யம் வந்திருக்க வேண்டும் என்றும் அவன் எண்ணத் தொடங்கினான்.

அதிலும் இப்போது சுந்தரசோழர் நோய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி இராஜ்யத்தைக் கவனிக்க முடியாத நிலைமையில் இருந்தார் அல்லவா? ஆதலினால் ஏன் தான் உடனடியாகத் தஞ்சாவூர் சிம்மாசனமேறி இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது?

இவ்விதம் மதுராந்தகனுக்கு ஏற்பட்டிருந்த அரசுரிமை வெறியைக் கட்டுக்குள் அடக்கி வைப்பது இப்போது பழுவேட்டரையர்களின் பொறுப்பாயிருந்தது. அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துவிட அவர்கள் விரும்பவில்லை. சுந்தரசோழரின் இரு புதல்வர்களும் வீராதிவீரர்கள்.

அவர்களுடைய வீரச் செயல்களினாலும் பிற குணாதிசயங்களினாலும் குடிமக்களின் உள்ளங்களில் அவர்கள் இடம் பெற்றிருந்தனர். கொடும்பாளூர் வேளார், திருக்கோவலூர் மலையமான் என்னும் இரு பெரும் தலைவர்கள் சுந்தர சோழரின் புதல்வர்களை ஆதரித்து நின்றார்கள். சைன்யத்திலேயும் ஒரு பெரும் பகுதி வீரர்கள் சுந்தரசோழரின் புத்திரர்களையே விரும்பினார்கள்.

ஆகையால் சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் வரையில் பழுவேட்டரையர்கள் பொறுமையுடனிருக்கத் தீர்மானித்தார்கள். இதற்கிடையில், சக்கரவர்த்தியின் மனமும் சிறிதளவு மாறிருந்ததை அவர்கள் அறிந்து கொண்டார்கள். தமக்குப் பிறகு இளவரசர் மதுராந்தகருக்குத் தான் பட்டம் என்று சுந்தர சோழரே சொல்லிவிட்டால் ஒரு தொல்லையும் இல்லை. இதற்குக் குறுக்கே நின்று தடை செய்யக்கூடியவர்கள் இளைய பிராட்டியும், செம்பியன் மாதேவியுந்தான்.

இளைய பிராட்டியின் சூழ்ச்சிகளை மாற்றுச் சூழ்ச்சிகளினால் வென்றுவிடலாம். ஆனால் தமிழ் நாடெங்கும் தெய்வாம்சம் பெற்றவராகப் போற்றப்பட்டு வரும் செம்பியன் மாதேவி தடுத்து நின்றால் அந்தத் தடையைக் கடப்பது எளிதன்று. அந்தப் பெருமாட்டி தாம்பெற்ற புதல்வன் சிம்மாசனம் ஏறுவதை விரும்பவில்லை என்பது எங்கும் பரவியிருந்தது. அன்னையின் வார்த்தையை மீறி மகன் சிம்மாசனம் ஏறுவதைக் குடிமக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? ஒன்று, அந்த அம்மாளும் தமது கணவரைப் பின்பற்றிக் கைலாச பதவிக்குச் செல்ல வேண்டும். அல்லது அவருடைய மனம் மாறச் செய்ய வேண்டும். தாயின் மனத்தை மாற்றக்கூடிய சக்தி பெற்ற பிள்ளையைத் தவிர வேறுயாருக்கு இருக்கக்கூடும்?

ஆதலின் அன்னையிடம் சொல்லி அவர் மனத்தை மாற்றும்படி மதுராந்தகத் தேவரை அடிக்கடி பழுவேட்டரையர்கள் தூண்டிக் கொண்டிருந்தார்கள். மதுராந்தகர் இந்தக் காரியத்தில் மட்டும் உற்சாகம் காட்டவில்லை.


இராஜ்யம் ஆளும் ஆசை அவர் உள்ளத்தில் வெறியாக மூண்டிருந்தது. ஆனால், அன்னையிடம் அதைப் பற்றிப் பேச மட்டும் அவர் தயங்கினார். ஏன் அந்த மூதாட்டியைச் சந்தித்துப் பேசுவதற்கே அவர் அவ்வளவாக விரும்பவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூடர்கள் உயிரை இழந்தனர்



சிறிய நகரம் ஒன்றின் அருகில் அண்ணன், தம்பி இருவர் இருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான ஒரு சிறு குடிசையில் தங்கியிருந்தனர்.

பெற்றோர், உறவினர் யாருமே அவர்களுக்கு இல்லை.

படிப்பும் இல்லை, வேலை எதுவும் இல்லை. இருவரும் நன்றாக கொழுகொழு என்று காணப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் கண்டால் அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள் எவரும் பேசுவதில்லை. அவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

சிற்றூண்டி விடுதிக்குச் சென்று சாப்பிட்டு விட்டுப் போவார்கள். காசு கொடுப்பதில்லை. சிற்றூண்டி விடுதிக்காரர் கேட்பதும் இல்லை.

அவர்களின் குடிசைக்கு எதிரில் ஒரு பெண் இருந்தாள். அவள் ஒரு அநாதை. அவள் சில வீடுகளில் வேலை பார்த்தாள். அவர்கள் கொடுக்கும் உணவைச் சாப்பிட்டு விட்டு குடிசையில் படுத்துக் கொள்வாள்.

அந்தப் பெண் மீது அண்ணன், தம்பி இருவருக்கும் ஆசை உண்டாயிற்று. ஒருவனுக்குத் தெரியாமல் இன்னொருவன் அவளிடம் நெருங்கி ஏதாவது பேசுவான். அவளோ சாமர்த்தியமாக நடந்து கொள்வாள்.

அந்தப் பெண்ணுக்கு, இனிப்பு, பலகாரம் முதலியவற்றை கொண்டு வந்து கொடுப்பார்கள்.

இவர்கள் இருவரையும் எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தாள்.

அதே சமயம் அவர்களுக்கு வேலையும் இல்லை, வருமானமும் இல்லை, அவர்கள் இருவரையுமே அவள் விரும்பவில்லை.

ஒருநாள் அண்ணன், தம்பி இருவரிடமும், "நீங்கள் இருவரும் என்னிடம் ஆசை கொண்டு என்னை அடைய விரும்புகிறீர்கள் ஆனால் உங்களில் யாரை ஏற்றுக் கொள்வது? என்று எனக்கு குழப்பமாக இருக்கிறது.

என் தாய் மரணத் தறுவாயில், பலசாலியான ஒருவனைப் பார்த்து திருமணம் செய்து கொள் என்று சொன்னாள். ஆகையால், நீங்கள் இருவரும், குத்துச் சண்டை போட்டு, யார் வெற்றி பெறுகிறீர்களோ அவரை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றாள் அவள்.

"மறுநாள் இரவு பத்து மணிக்குப் பிறகு, அந்த வட்டாரத்தில் இருந்த பூங்காவில், அண்ணனும் தம்பி குத்துச் சண்டையில் இறங்கினார்கள். மிகவும் கடுமையாக இருவரும் மோதிக் கொண்டனர். ஒரு மணிநேரம் குத்துச் சண்டை தொடர்ந்தது. கடைசியில், இருவருமே தரையில் மூர்ச்சையாகி வீழ்ந்தனர். அவர்கள் உயிர்பிரிந்தது.

அந்தப் பெண்ணின் பிரச்சினையும் தீர்ந்தது.

மூடத்தனத்தால் உயிரை இழந்தனர் மூடர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாக ஒருபோதும் மனம் விரும்பாது.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்குகள் எண்ணும் இடங்கள் கண்காணிக்கப்பட வேண்டும்

*நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராசா* என்ற திரைப்படத்தைப் பார்த்தவர்களுக்கு ஜனநாயகத்திற்கான தேர்தல் எப்படியாக நடக்கிறது என்பது தெரிந்திருக்கும்.

அந்தத் திரைப்படத்தில் தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியும் சிறந்த பேச்சாளருமாகிய நாஞ்சில் சம்பத் நடித்துள்ளார்.

மனநிலை குன்றிய ஒருவரை சட்டமன்ற உறுப்பினராக ஆக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனை.

அதற்காக நாஞ்சில் சம்பத்தை சம்பந்தப்பட்டவர்கள் சந்திக்கின்றனர்.

பணம் கை மாற்றப்படுகிறது. தேர்தல் முடிந்தாயிற்று. வாக்குகளின் விபரங்கள் அறிவிக்கப்படுகின்றன.

குறித்த மனநிலை பாதிப்பானவரின் வாக்குகள் மிகவும் பின்னடைவாக இருக்கிறது.

இதன்காரணமாக நிபந்தனையை நிறைவேற்ற வெளிக்கிட்டவர்கள் மனம் சோர்ந்து விடுகின்றனர்.

நாஞ்சில் சம்பத்திடம் சென்று நிலைமையைக் கேட்கின்றனர். அதற்கு, நீங்கள் அஞ்ச வேண்டாம். உங்கள் விருப்பப்படி மனநிலை பாதிக்கப்பட்ட நபர் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார் என உறுதிபடத் தெரிவித்தார் நாஞ்சில்.

என்னே! ஆச்சரியம். இறுதி முடிவு அறிவிக்கப்பட்டபோது மனநிலை பாதிக்கப்பட்டவர் வெற்றி வெற்றிருந்தார்.

இது எப்படி சாத்தியமாகும். எண்ணப்படும் வாக்குகள் அறிவிக்கப்பட்டபோதெல்லாம் பின்னடைவாக இருந்த ஒருவர் இறுதியில் எப்படி வெற்றி வெற்றார்.

இந்த சந்தேகத்தை சம்பந்தப்பட்டவர்கள் நாஞ்சில் சம்பத்திடம் கேட்கின்றனர்.

அதற்கு நாஞ்சில் சம்பத் சொல்கிறார்; எல்லா அரசியல்வாதிகளும் வாக்காளர்களுக்குப் பணத்தைக் கொடுத்தார்கள். நான் சற்று வித்தியாசமாகச் சிந்தித்தேன். வாக்குகளை எண்ணுகின்றவர்களுக்குக் காசைக் கொடுத்தேன் வெற்றி நமதாகியது என்றார்.

மேற்குறித்த திரைப்படத்தின் நிகழ்வை இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பதற்கு மூலகாரணம் நம் நாட்டிலும் ஒவ்வொரு தேர்தல் முடிவிலும் பொதுமக்களிடையேயான கதை மோசடி நடந்துவிட்டது. வென்றவர் அவர். ஆனாலும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டவர் இவர் என்பதாக கதை அமைகிறது.

எனவே, பெருமளவு பணச் செலவில் அதிகளவு மனித உழைப்பில் நடத்தப்படுகின்ற தேர்தல் நூறு வீதம் நேர்மையாகவும் சரியாகவும் நடத்தப்பட வேண்டும்.

ஆகையால் வாக்களிப்பின்போது கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் வாக்குகள் எண்ணப்படுவதையும் எண்ணப்படும் வாக்குகள் பதிவு செய்யப்படுவதையும் முழுமையாகக் கண்காணிக்க வேண்டும்.

தவிர, கடந்த காலங்களில் தேர்தல் கண்காணிப்பு என்பது இடையிடையே கண்காணிக்கப்படுவதாக இருந்த நிலைமைகளும் உண்டு.

ஆகையால் வாக்களித்து, வாக்குகள் எண்ணப்பட்டு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்மூலமே மோசடி இல்லாத தூய்மையான தேர்தலை நடத்த முடியும்.

## தமிழ்ப்பொது வேட்பாளர் தனியாள் அல்ல

# ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தின் அடையாளம்

### வாக்குரிமையைச் சரியாக உபயோகியுங்கள் – பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள்

தமிழ்ப்பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தனியாள் அல்ல. அவர் ஒட்டு மொத்தத் தமிழ்த் தேசத்தின் குரல்.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாக முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறும் வரைக்கும் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆயுதப் பலம் பேரம்பேசக்கூடிய பெரும் சக்தியாக இருந்தது.

இப்போது எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குகள்தான். யுத்தத்தின் பின்னரான கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்த வாக்குப் பலத்தை நாம் வீணடித்துவிட்டோம். இம்முறையாவது அவற்றை இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (08. 09.2024) ஏழாலை ஐக்கிய நாணய சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் தமிழினம் அரசியல் ரீதியாக மிகமோசமாகப் பலவீனம் அடைந்துள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தை வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் ஊடாகச் சட்டரீதியாகக் கையகப்படுத்தி வருகின்றது. தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை, பண்பாட்டைத் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றது. இவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது.

தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக மாத்திரமே உலகுக்குக் காட்டி வருகின்றார்கள். இலங்கைத்தீவில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தமிழ் மக்கள் மீது தொடுத்த யுத்தமே மூலகாரணம் ஆகும்.

மாறி மாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் கடன் வாங்கி யுத்தத்தை முன்னெடுத்தமையே நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் தள்ளியது. ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்க எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் தயாராக இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருக்க முடியாது. இதனைக்கருத்திற்கொண்டே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் பா. அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனிநபர் அல்ல. ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்தினதும் குரல். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் ஓங்கி ஒலிக்கச் செய்வோம் என்று தெரிவித்தார்.(ம-7)

## நல்லூர் மகோற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட பொருட்களை மீளப்பெற்றுக்கொள்க

*(நல்லூர்)*

நல்லூர் மகோற்சவ காலத்தில், ஆலயத்திற்கு வருகை தந்தவர்களால் தவறவிடப்பட்ட பொருட்கள் யாழ். மாநகர சபையில் உள்ளதாகவும் அதனை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறுமாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆலயத்திற்கு வருகை தந்தவர்கள் தவறவிட்ட பொருட்கள் கண்டெடுத்தவர்கள் அவற்றை ஆலய உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைத்திருந்தனர்.

அவற்றில் இதுவரை உரியவர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளாத கைச்சங்கிலி ஒன்று, மோதிரம் (பெண்களினது) ஒன்று, பணப்பைகள் 9, மணிக்கூடுகள் 18, தேசிய அடையாள அட்டை 4, சாரதி அனுமதிப்பத்திரம் 4, வங்கி அட்டைகள் 4. மோட்டார் சைக்கிள் திறப்புகள் உள்ளிட்ட 39 திறப்புகள் என்பன மாநகர சபையில் உள்ளது.

இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களை உறுதிப்படுத்தி மாநகரசபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் இன்று(11) தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## தாண்டிக்குளத்தில் மோட்டார் குண்டு மீட்பு

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்து மோட்டார்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றினை அதன் உரிமையாளர் துப்பரவு செய்தபோது குறித்த காணியில் சந்தேகத்திற்கிடமான வெடி பொருள் இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, வவுனியா பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பரிசோதித்ததில், அது மோட்டார் குண்டு என உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## நீராடச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

*(ஏழாலை)*

யாழில் வீட்டுக் கிணற்றடியில் குளிக்கச் சென்ற ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த செல்வராசா கார்த்தீபன் (வயது 35) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் காலை தோட்டத்திற்குச் சென்று தோட்டவேலையைச் செய்துவிட்டு குளிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குளிப்பதற்குச் சென்றவர் நீண்ட நேரமாகத் திரும்பி வராத காரணத்தினால் மனைவி கிணற்றடிக்குச் சென்று பார்வையிட்ட வேளை குறித்த நபர் நிலத்தில் விழுந்த நிலையில் அசைவற்றுக் காணப்பட்டுள்ளார்.

அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## காயத்திரி மந்திர மஹாயக்ஞம்

*(யாழ்ப்பாணம்)*

ஸ்ரீ சத்தியயாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் காயத்திரி மஹாயக்ஞமானது எதிர்வரும் 19. 09.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை சங்கிலியன் வீதி நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தியாவின் பிரசாந்தி நிலையம், புட்டபரத்தியிலிருந்து வருகை தந்துள்ள வேத விற்பனர் நாரயணனால் இவ் மகாயாகம் நடத்தப்படவுள்ளது.

யாழினைத் தொடர்ந்து குறித்த மஹாயக்ஞமானது மறுநாள் வியாழக்கிழமை பம்பலப்பிட்டி வஜ்ரப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ள அதே வேளை இம் மாதம் 17 ஆம் திகதி பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரியிலும் மறுநாள் வீரமுனை ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்திலும் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09

### நெப்போலியன் காலம்

1798 இல் பிரெஞ்சுப் புரட்சியின் படைகள் சுவிட்சர்லாந்தைக் கைப்பற்றி புதிய கூட்டாட்சி அரசியலமைப்பைத் திணித்தன. இதனால் நாட்டில் அரசாங்கம் கூட்டாட்சியினது மண்டலங்கள் (பிராந்தியங்கள்) நடைமுறை ஒழிக்கப்பட்டது. மேலும் முல்ஹாசென் மற்றும் வெல்டெல்லினா பள்ளத்தாக்குகள் சுவிட்சர்லாந்திலிருந்து பிரிக்கப்பட்டன. ஹெல்வெட்டிக் குடியரசு என அழைக்கப்பட்ட புதிய ஆட்சிமுறை அதிகம் பிரபலமாக இருந்திருக்கவில்லை. இது அந்நியப்படைகளின் படையெடுப்பின் மூலம் உருவாக்கப்பட்டது.

மேலும் நூற்றாண்டுகளாக இருந்த பாரம்பரியம் அழிவதற்கு காரணமானது. பின்னர் சுவிட்சர்லாந்து வெறும் செயற்கையான பிரெஞ்சு நாடாக ஆக்கப்பட்டது. 1798 செப்ரெம்பரில் எழுந்த நிட்வால்டன் கிளர்ச்சியை பிரெஞ்சு படை கடுமையாக அடக்கியது, பிரெஞ்சுப் படையின் அடக்குமுறை ஆட்சிக்கும் அந்தப் மக்களிடையே படையெடுப்புக்கு இருந்த எதிர்ப்புக்கும் எடுத்துக்காட்டாகும்.

பிரான்ஸ் மற்றும் அதன் எதிரிகளிடையே போர் வெடித்த போது, ரஷ்ய மற்றும் ஆஸ்திரிய படைகள் சுவிட்சர்லாந்துக்குள் நுழைந்தன. சுவிஸ் மக்கள், ஹெல்வெட்டிக் குடியரசின் கீழ் பிரெஞ்சிற்காக் போரிடுவதற்கு மறுத்துவிட்டனர். 1803 இல் பாரிஸில் நெப்போலியன் இரு தரப்பிலும் முன்னனி சுவிஸ் அரசியல் தலைவர்களுக்கு ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். அதன் விளைவாக சமரச நடவடிக்கை ஏற்பட்டது.

இதனால் சுவிஸ் சுய ஆட்சியுரிமை பெரிதும் புனரமைக்கப்பட்டது. மேலும் 19 மண்டலங்கள் ஒருங்கமைந்த கூட்டமைப்பு உருவானது. அதிலிருந்து சுவிஸ் அரசியல் பெரும்பாலும் மத்திய அரசின் உதவியுடன் மண்டலங்களின் மரபு சார் தனியாட்சி என்ற சமநிலைக்கே முக்கியத்துவம் வழங்கியது.

1815 இல் நடைபெற்ற வியன்னா மாநாடு சுவிஸ் சார்பின்மையை முழுமையாக மீண்டும் நிறுவியது. மேலும் ஐரோப்பிய சக்திகள் சுவிஸ் நடுநிலைத் தன்மையை நிரந்தரமாக அங்கீகரிக்க ஒப்புக்கொண்டன. சுவிஸ் போர்ப்படைகள் அயல் நாட்டு அரசாங்கங்களுக்கு 1860 இல் சையிஜ் ஆஃப் கெய்டாவில் அவர்கள் போரிட்ட அந்தக் காலம் வரை சேவை வழங்க அனுமதிக்கப்பட்டன.

வாலெய்ஸ், நியூசாடெல் மற்றும் ஜெனீவா போன்ற மண்டலங்களின் ஒப்புதலுடன் சுவிட்சர்லாந்தின் நிலப்பகுதியை அதிகரிக்கவும் ஒப்பந்தம் அனுமதித்தது. அதிலிருந்து, சுவிட்சர்லாந்தின் எல்லைகள் இது வரை மாற்றப்படவில்லை.

### சுவிட்சர்லாந்தில் அதிகாரம் பகிரப்பட்டிருக்கும் விதம்

13ஆம் நூற்றாண்டில் உரி ,ஸ்க்விஷ், அன்டர் வால்டன் ஆகிய மூன்று கன்டன் பிரதேசங்களில் இருந்து ஆரம்பமான சுவிட்சர்லாந்து 1848இல் நிறைவேற்றிய சமஷ்டி அரசியல் யாப்பில் 1874 இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நவீன கூட்டாட்சியாக இன்று விளங்குகின்றது.

இன்று அது கன்டன் எனப்படும் 26 பிராந்திய அல்லது மண்டல அரசுகளினால் ஆன ஒரு சுதந்திர அரசாகும். (இது 20 பிராந்தியங்கள் பூர்ண கன்டன்களாலும் 6 பிராந்தியங்கள் அரை கன்டன்களாலும் ஆனது)

### கூட்டாட்சி (சமஷ்டி) வடிவமைப்பு

சுவிஸ் மக்கள் அமெரிக்க எடுத்துக்காட்டுகளால் ஊக்கம் பெற்று உண்மையான அரசியலமைப்புக்கு கூட்டாட்சி வடிவமைப்பை உருவாக்கினர்.

முன்னர் கூறியதுபோல் சுவிற்சர்லாந்து 26 கன்டன்களாக பிரிக்கப்பட்டுள்ளது கன்டன்கள் என்பது பிராந்தியங்கள் அல்லது மண்டலங்களைக் குறிக்கும் என்று முன்னர் கூறப்பட்டது. இவற்றுள்,

- 17 கன்டன்கள் ஜேர்மன் மொழிபேசுவோரைப் பெரும்பான்மையினராகக் கொண்டவை (80% மக்கள் ஜேர்மன் மொழிபேசுவோர்).
- 4 கன்டன்கள் பிரஞ்சு மொழி பேசுவோர் பகுதிகளாக உள்ளன. இவை ஒருமொழி பேசுவோர் (Unilingual) கன்டன்களாகும்.
- 1 கன்டன் இத்தாலியன் மொழி பேசுவோரைக் கொண்டதாய் ஒரு மொழி பேசுவோர் வகையினதாக உள்ளது.
- 3 கன்டன்கள் இருமொழி பேசுவோர் (Bilingual) கன்டன்களாக உள்ளன. இக் கன்டன்களில் ஜேர்மன், பிரஞ்சு ஆகிய இரு மொழிகளைப் பேசுவோர் வாழ்கின்றனர்.
- 1 கன்டன் மும்மொழி பேசுவோர் (Trilingual) கன்டன் ஆக விளங்குகிறது. Graubunden என்றபெயருடைய இக்கன்டனில்ஜேர்மன், இத்தாலியன், ரோமன்ஷ் ஆகிய மொழிகளைப் பேசுவோர் வாழ்கின்றனர்.

14 கன்டன்களில் கத்தோலிக்கர் பெரும்பான்மையினராக உள்ளனர். மீதி 12 கன்டன்களில் புரட்டஸ்தாந்தியர் பெரும்பான்மையாக உள்ளனர்.

மொழிப் பிரிவுகளுக்கும், சமயப் பிரிவுகளுக்குமிடையில் நேரடியான மேற்கவிகை (Direct overlap) இல்லை. ஜேர்மன் மொழியைப் பேசுவோரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கன்டன்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்களாக உள்ளனர். இவ்வாறே பிரஞ்சு மொழிபேசுவோர் பெரும்பான்மையினராக வாழும் கன்டன்களில் பெரும்பான்மையினர் புரட்டஸ்தாந்தியராக உள்ளனர்.

சுவிற்சர்லாந்தின் ஒவ்வொரு கன்டனிலும் சிறுபான்மையினர் என்ற வகையினர் வாழ்ந்து வருகின்றனர். இது ஓரிடத்தில் மொழிச் சிறுபான்மையாக இருக்கலாம் இன்னோர் இடத்தில் சமயச் சிறுபான்மையாக இருக்கலாம் ஆயினும் முழுநாடும் இரு முகாம்களாகப் பிளவுபடும் நிலை அந்நாட்டில் இல்லை.

சுவிஸ் நாட்டின் சனத்தொகைப் பரவலில் காணப்படும் இயல்பு ஒன்றினைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் அவசியமானது. சூரிச் என்ற கன்டனில் நாட்டின் மொத்த சனத்தொகையின் 17 வீதத்தினர் வாழ்கின்றனர். அப்பென்சல் என்ற இன்னொரு கன்டனில் மொத்த சனத்தொகையின் 0.02% மக்கள் மட்டுமே வாழ்கின்றனர்.

கன்டன்களிடையே மக்கள் தொகைப் பரவலில் சமத்துவ மின்மை இருந்துவருகிறது. ஆயினும் சமஷ்டி அலகுகள் என்றவகையில் கன்டன்கள் யாவும் சமத்துவமுடையனவாக உள்ளன. சனத்தொகையில் குறைந்த ஒரு பகுதி என்ற காரணத்திற்காக ஒரு கன்டன் பாரபட்சமாக நடத்தப்படுவதில்லை.

### சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறைமை

- சமஷ்டி அரசியலமைப்புத் தத்துவங்களுக்கமைய கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாக சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு காணப்படுகின்றது. இங்கு சமஷ்டியின் விசேடமான மாதிரியாகக் கருதும் கூட்டுச் சமஷ்டி (Confederal) முறையின் பண்புகள் அதிகம் இடம்பெற்றுள்ளன.
- மாநில அலகுகள் மத்திய அரசிலிருந்து ஒப்பீட்டு ரீதியாகச் சுதந்திரமானதும் மாநில அலகுகளை மேவிச் செல்லக்கூடிய அதிகாரமொன்று மத்திய அரசிடம் காணப்படாமையும் கூட்டுச் சமஷ்டி முறைமையொன்றின் அடிப்படைப் பண்பாகும்.
- இதற்கமைய சுவிட்சர்லாந்து கன்டன்கள் 26உம் நகர சபைகள் என அழைக்கப்படும் சிறிய 2,212 பிரதேசங்களையும் உள்ளடக்கியுள்ளது.
- கூட்டுச் சமஷ்டி அரசாங்க முறை என்பது "இறைமை கொண்ட அரசுகளின் தொகுதியொன்று, வரையறுக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக அல்லது நோக்கங்களுக்காக அரசிற்குரிய இறைமை அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக்கொண்டு ஒன்றோடொன்று ஒன்றிணையும் கூட்டணியாகும்".
- விருத்தியடைந்த சமஷ்டி முறையொன்று காணப்பட்டாலும், சுவிட்சர்லாந்தானது ஒப்பீட்டு ரீதியாகச் சிறிய நாடாகும்.

### சுவிட்சர்லாந்து அரசியலமைப்பின் அடிப்படைகள்

- சுவிட்சர்லாந்து அரசியலமைப்பிற்கு அமைய அந்நாட்டின் கூட்டுச் சமஷ்டி அரசியலமைப்பே செயற்படுகின்றது. எனினும் அது நடைமுறையில் சமஷ்டியாகவே தொழிற்படுகின்றது.
- பிரான்சிய ஆக்கிரமிப்பு, நவீனமயமாதலின் தாக்கங்கள் போன்ற வரலாற்று ரீதியான தாக்கங்கள் காரணமாக அந்நாட்டில் காணப்பட்ட கூட்டுச் சமஷ்டி முறை சமஷ்டி முறையாக மாற்றம் பெற்றுள்ளது.
- அந்நாடு 1848, 1874, 1999 ஆகிய ஆண்டுகளின் அரசியலமைப்புகள் மற்றும் அரசியலமைப்புத் திருத்தங்கள் ஊடாக ஓரளவு மையப்படுத்தப்பட்ட செயல்முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இங்கு சுவிட்சர்லாந்து தேசத்தினை உருவாக்கும்போது அங்கு வாழும் பல்லின மக்கள் குழுக்களையும் ஓரினமாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule) சுயாட்சி நிருவாகம் (Self-Rule) என்பனவே சுவிட்சர்லாந்தில் காணப்படும் பிரதான அரசியலமைப்பு சித்தாந்தங்களாகும். கன்டன்களின் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் சுயமாகச் செயற்படக்கூடியதைப் போன்று மத்திய அரசின் நிர்வாகத்தில் கன்டனின் பங்குபற்றலும் இடம் பெறுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 இராஜாங்க...

ளார்.

அதன்படி, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா சமன்மலீ குமாரசிங்க, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 47(3) (அ) பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இவர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## டிப்பர்...

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் நேற்றுப் பிற்பகல் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் வினுதா விஜயகுமார் (வயது-17) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.40 மணியளவில் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் மாணவி துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தபோது டிப்பர் வாகனம் ஒன்று அவரை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

## ரயில் மோதியதில்...

மடைந்துள்ளார். உயிரிழந்தவர் யார் என அடையாளம் காணப்படவில்லை என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இருந்து வவுனியா நோக்கி நேற்று மாலை பயணித்த புகையிரத மானது புளியங்குளம் பகுதியை கடந்து ஓமந்தையை நோக்கி நகர்ந்தபோது புகையிரதத் தண்டவாளத்தில் நடந்து சென்ற பெண் மீது புகையிரதம் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7, 250)

## இன, மத...

யுள்ளார்.

மாத்தளை நகரில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் தோல்விக்கு அஞ்சுபவர்கள் இன்று பிரசார மேடைகளில் மக்கள் மத்தியில் அச்சத்தினை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனது வெற்றி, நாட்டு மக்களின் வெற்றியாகும். தேசிய மக்கள் சக்தியினால் நூற்றுக்கு 3 வீத வாக்குகளை மாத்திரமே பெறமுடியும் என எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது அவ்வாறு அவர்கள் கூறுவதில்லை. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றால் அசம்பாவிதங்கள் இடம்பெறும் எனக் கூறிவருகின்றனர். அதாவது தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்பதை எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் நன்கு அறிவார்கள் அதனாலேயே சமூகத்தில் போலி விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

நாம் எதிர்வரும் 22ஆம் திகதி நிச்சயமாக வெற்றி பெறுவோம். போலி விமர்சனங்களைக் கண்டு நாம் அச்சமடையப் போவதில்லை. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மத்திய வங்கி கொள்ளையர்கள் பயப்பட வேண்டும்.

கலாசார நிதியத்தில் நிதிமோசடியில் ஈடுபட்டவர்கள் பயப்பட வேண்டும். வீடமைப்பு நிதியத்தில் கொள்ளையடித்தவர்கள் பயப்பட வேண்டும். அதனைவிடுத்து இந்த நாட்டின் அப்பாவிப் பொதுமக்கள் பயப்படத் தேவையில்லை.

நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் நிறைந்த யுகம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் உருவாக்கப்படும். தேர்தலில் நாம் வெற்றி பெற்று இந்த நாட்டில் ஊழல் மோசடிகளை முற்றாக ஒழிப்போம்.

அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்ளமாட்டோம். நாட்டில் நடைமுறையில் உள்ள ஊழல் அரசியல் கலாசாரத்தினை நாம் முற்றாக மாற்றுவோம். ஏனைய கட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே தேர்தல் வெற்றியையும் நாம் கொண்டாடுவோம்.

ஏனைய கட்சிகளுக்கு வாக்களிக்கத் தீர்மானித்துள்ள மக்களிடம் நாம் ஒரு கோரிக்கையினை முன்வைக்கின்றோம்.

ஜனநாயக உரிமைப்படி வாக்களிப்பதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது ஆனால் நாட்டில் புதிதொரு மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் தேசிய மக்கள்சக்தியுடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

எமது ஆட்சியில் நாம் யாரையும் கைவிடமாட்டோம். மக்கள் யுகம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஏற்படுத்தப்படும்.

யாழில் நான் தெரிவித்த கருத்தினை இனவாதச் செயற்பாடாக ரணில் விக்கிரமசிங்க திரிபுபடுத்தினார். ஆனால் அதற்குச் சுமந்திரன் தகுந்த பதிலடி வழங்கினார். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நாட்டில் இன, மத சுதந்திரம் பேணப்படுவதுடன் கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளிப்போம் இவ்வாறு அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## முடிவு...

மாவை சேனாதிராஜா, ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஏற்கெனவே கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் இடைக்கால தடைவிதிக்கப்பட்டுள்ள சி.சிறீதரன் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு ஆதரவு எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நேற்று வவுனியாவில் கட்சியின் விசேட கூட்டம் இடம்பெற்றிருந்தது.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்தியர், ப.சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இடம்பெற்றிருந்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 5592
M 9 8 0 0 9 9
அத சம்பத M 0 0 9 9
சீட்டிழுப்பு இலக்கம் 167
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1622
H 32 54 60 67 H
Double Chance 01914

மெகா பவர்
திகதி 10/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1940
T 06 18 22 28 76
86249

லக்கி 7 VIP
திகதி 2024.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 418
H 2 4 0 0 6 7 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3834
சீட்டிழுப்பு திகதி 10.09.2024
P 28 34 36 44 P
24689

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.10
சீட்டிழுப்பு இலக்கம் 901
விருச்சிகம் 06 08 39 49 விருச்சிகம்
25256 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
10.09.2024 வெற்றி வாரம் 300 வர்ணம் சிவப்பு
O 3 8 5 8 7 2
28149
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ.21,771,636.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2566 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 10.09.2024 தினம் செவ்வாய்
15 31 50 74 G
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ. 56,980,470.40

சனிதா
திகதி 2024.09.10 வெற்றி வாரம் 4727 வர்ணம் பச்சை
28 46 55 59 A
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ.50,545,326.00
26946

சசிரி SASIRI
வெற்றி வாரம் 527
2024.09.10
10 14 43
06
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,588,880/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4278 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.09.10 தினம் செவ்வாய்க்கிழமை
13 23 34 40
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ.7,284,571.60
230012

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 19 12 15 36 41
1742
10.09.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ. 544,170,685.40

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2392
சீட்டிழுப்பு திகதி : 2024.09.10
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ.65,863,231.20
06 17 43 49 O
416613


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மனி...

சொந்த ஊரான உடுப்பிட்டிக்கு, விடுமுறைக்காக வந்திருந்த ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். உடுப்பிட்டிப் பகுதியை சேர்ந்த செல்வராசா சிவஞானம் (வயது 74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீண்ட காலமாக ஜேர்மன் நாட்டில் வசித்து வந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விடுமுறையை கழிக்க தனது சொந்த ஊருக்கு திரும்பி இருந்தார். கடந்த சனிக்கிழமை தனது மனைவியுடன் உறவினர் வீட்டுக்கு சென்ற வேளை உடுப்பிட்டியில் விபத்தில் சிக்கி இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இருவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த நபர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவி தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1158) 076 825 7716 (ஆகாஸ்)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/=
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

(331)

075 498 5400, 077 937 0000, 021 221 7600

**விற்பனைக்கு**

2024 ஆம் ஆண்டு July மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கைப் பாவனையுள்ள BJH எனும் இலக்கமுடைய CT 100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. நிறம் - நீலம், Km - 1300km (1903)

076 075 1357

**A/L PHYSICS**

**Tamil Medium**

யாழ். ஆனைப்பந்தி சந்தியில்...

**T.ஜிந்துஜன்**

- குழு வகுப்புக்கள் ( 3 பிரிவுகளாக 06.00AM, 06.00PM, 7.30 PM )
- 1979 - 2023 Past paper + Theory Revision
அலகு ரீதியாக
- 2026 - Mechanics
- 2025 - Light
- 2024 & Day - 2015 முதல் Full paper Classes
Zoom & நேரடியாக இணைய முடியும்

(1896)

Youtube : TJ DOMAIN

T.P: 076 603 4895

**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (304)

074 17 37 684

**இந்தியன் விசா சேவைகள்**

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (332)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

**வேலைவாய்ப்பு!**

1. Graphic Designer கிராபிக் டிசைனர்
2. Tamil Type Setter

முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

SALARY 30,000/- to 50,000/-

புதன்கிழமை (11.09.2024) காலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும். (1897)

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA PRINTERS 379, Kasthuriyar Road, Jaffna. 0776622981 | 0772209527


**66 ஆவது பிறந்ததினமும் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்**



அமரர் செல்வரட்ணராஜா யோகராணி (லீலா)

மலர்வு : 11.09.1958 உதிர்வு :25.02.2021

11.09.2024

ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்குகின்றோம்

ஓம் முருகா

தகவல் : கணவன் செல்வரட்ணராஜா, சதீஸ்குமார், மிதில்குமார், றஞ்சித்குமார், ரெனிஸ்குமார், ஆஜித்குமார் (பிள்ளைகள்), பேரப்பிள்ளைகள் (330)

தற்காலிக முகவரி : உடுவில் தெற்கு, கர்த்தர் கோவிலடி.

நிரந்தர முகவரி : பட்டிநகர், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.


**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள். (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1159) CIMS College 49A, Chapel Street,Jaffna.

College Of International Migration Skills 0777 068 777 / 077 7719 322

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322 077 77 19 322 Visit Visas Air Tickets


- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1159)


**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் அருளையா சுப்பிரமணியம்

தோற்றம் 11.07.1939 மறைவு 24.08.2023

எமது குடும்பத்தின் தலைவனாக எமை எல்லாம் வழிநடத்தி வாழ்க்கையை கற்றுத் தந்தீர்கள் கண்ணிமைப்பொழுது போல ஆண்டு ஒன்று கடந்து விட்டது. உங்கள் நினைவுகள் எமை விட்டு நீங்கவே இல்லை.

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர் (329)


**வட இந்திய யாத்திரை**

காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை

ஆரம்பம் - 10.10.2024 நாட்கள் - 10

காசி காளபைரவர், காசி விசாலாட்சி, அன்னபூரணி, கங்கை பூஜை, திருவேணிசங்கமம், கங்கா, யமுனா, சரஸ்வதி நதி, சீதா மண்ணுக்குள் புதையுண்ட இடம் அயோத்தி இராமர் கோயில், சீரடி பாபா, சனி சிங்கனாபூர், இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புளாணி, மதுரை மீனாட்சி இவ்வளவு ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

**தென்னிந்திய யாத்திரை**

ஐந்து மாநிலங்களுடான யாத்திரை தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா

ஆரம்பம் - 20.11.2024 நாட்கள் - 15 (312)

60 இற்கும் மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

T.ஸ்ரீரங்கநாதன். மகன் ராஜன்

59,3/6 செட்டியார் தெரு, கொழும்பு

077 768 0102, 077 736 2154


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.